கடற்கரை கவியரங்கு எண் – 619

நாள் 06-11-2022

# எழுக மனமே ! எழுக!!

அழுகின்ற மனத்திற்கு வலி இருப்பதில்லை!
தொழுகின்ற மனமதுவும் தொய்வு கொள்வதில்லை!
விழுகின்ற பூக்களுக்காய் மரம் நோவவில்லை!
எழுகின்ற மனமோ தோல்வி காண்பதில்லை!

வழுவாது உண்மையைச் சூடும்மனம் கலங்குவதில்லை!
தழுவாது தோகையவள் சூல் கொள்வதில்லை!
உழுவாது நிலம் தன்னில் பயிர் விளைவதில்லை!
அழுவாது பிள்ளையது மண்ணில் மூச்சிழுப்பதில்லை!

- வேறு –

அன்பே உயிர்களின் ஆனந்தக் கூடம்!
என்பே உடல்தனை இயைந்து நிறுத்தும்!
துன்பம் என்பது மனத்தின் வடிவே!
துயரம் என்பது அதனின் பிறப்பே!

இயற்கை என்பது இன்முக வடிவே!
செயற்கை மனிதச் சிந்தையின் நிலையே!
மயக்கம் கூட்டும் மானிட வாழ்வியல்!
தயக்கமின்றிக் கொள்ளும் மனத்தின் பிறழ்வே!

தடையும் விடையும் தந்திடும் வாழ்வியல்;
மடைவிடும் வெள்ளமாய் மனத்தின் திறப்பே!
விடையதைத் தேட கேள்விகள் எதற்கு?
அடைவோம் அன்பில் இறையதன் நிலையே!

- கவிவளவன் ஆகிய கு.ப. அசோகன்

06-11-2022 (06.20 AM)

